# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 356/மா/2025

நாள்: 09.07.2026

N. பஞ்சாட்சரம்,
சென்னை–59. --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–59, தாம்பரம், இரும்புலியூர், சாலமன் தெரு. கதவு எண் 9/5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. N.பஞ்சாட்சரம் என்பவரின் 23.09.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.09.2025 அன்று பெறப்பட்டு 356/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–59, தாம்பரம், இரும்புலியூர், சாலமன் தெரு. கதவு எண் 9/5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. N.பஞ்சாட்சரம் என்பவர் தனது 23.09.2025 நாளிட்ட மனுவில் இணைத்தனுப்பியுள்ள தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையாளருக்கு முகவரியிட்ட 11.08.2025 நாளிட்ட புகார் மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சியில் மண்டலம் 5ல், OSR நீதியின் கீழ் பணி மேற்கொள்ள 04.02.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வார்டு எண்.69 சாய் நகர் பூங்கா மராமத்து பணிக்கு நான் ஆன்லையின் டெண்டர் போட்டது சம்பந்தமாக.

மாநகர மண்டலம் 5, உதவி ஆணையாளர் வணக்கம்,

நாங்கள் 04.02.2025 ஆன்லைன் மூலம் நடைபெற்ற டெண்டரில் நான் போட்ட டெண்டர் எர்ரர் என்று ரத்து செய்து எனக்கு பதிவு தபாலில் கடிதம் அனுப்பி இருக்கிறீர்கள்.

04.02.2025 நடைபெற்ற டெண்டருக்கு மூன்று நாள் முன் தேதியில் 01.02.2025 ல் டெண்டர் போட்டுள்ளேன். ஆவணங்கள் உள்ளது. முன்வைப்பு தொகை மதிப்பீட்டில் 1% ரூ.60,000/– கட்டியுள்ளேன். 04.04.2025ல் டெண்டர் ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறப்பீர்கள் என்று நான் காத்திருந்தேன். உங்கள் முன் திறந்தார்களா தெரியாது. எர்ரர் என்றால் நான் போட்டதற்கான சான்றுகள் கிடைத்து இருக்காது. நீங்கள் என்னிடம் இருக்கும் ஆவணங்களை சரி பார்க்கவில்லை. என்னை விசாரிக்க வில்லை. 01.02.2025ல் நான் போட்ட ஆன்லைன் டெண்டர் சரியாக உள்ளது.

தாங்கள் அனுப்பிய எர்ரர் விவரத்தில் வேலையின் பெயர், ஒப்பந்ததாரர் பெயர் எர்ரர் ஆகவில்லை. தேதி குறிப்பிட வில்லை. டெண்டர் தகவல் டெண்டர் திறந்த அன்றே தெரிவிக்க வேண்டும். ஆனால் தாங்கள் தயவு செய்து மறுபரிசீலனை செய்து குறைந்த மதிப்பீடு கொடுத்து இருக்கும் எனக்கு வேலை வழங்க வேண்டுகிறேன்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையாளர் தனது 20.11.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 6140/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5–இல் வார்டு எண்.69–இல் அமைந்துள்ள சீரடிசாய் நகர் பகுதியில் 5வது தெருவில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிய பூங்காவினை அமைத்திடவும், அதனை சுற்றி நடைபாதை மரக்கன்றுகள், சிறுவர் விளையாட்டு பூங்கா மதிப்பீடு ரூ.60.00 இலட்சத்தில் அமைக்க 03.12.2024 நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் தீர்மான எண்.640–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 04.02.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.பஞ்சாட்சரம் என்பவரால் அளிக்கப்பட்ட இணைய வழியாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்ட நேர்வில் ஒப்பந்ததாரரின் விலை விகிதம் சரியாக வரப்பெறாமல் NO RANK என குறிப்பிட்டு கணினியில் வரப்பெற்றது.

இந்நேர்வு குறித்து இவ்வலுவலக கடிதம் ந.க. எண் 003/2024/இ1, நாள் 26.02.2025 ஆம் தேதிய கடிதத்தின் வழியாக மாநில தகவல் அதிகாரி, தேசிய தகவல் மையத்திடம் (NIC) ஒப்பந்ததாரரின் விலைவிகிதம் சரியாக வரப்பெறாமல் NO RANK என குறிப்பிட்டு வரப்பெற்றது தொடர்பாக விவரம் கோரப்பட்டது. இதற்கு இம்மண்டல செயற்பொறியாளரிடம் ஒப்பந்ததாரரால் ஒப்பந்தபுள்ளிகள் விலைவிகிதம் இணைய வழியாக சமர்ப்பிக்கப்பட்டதில் ஒப்பந்ததாரரால் ஏதேனும் தவறாக குறிப்பிட்டிருக்கலாம். அதன் காரணமாகவே NO RANK என வரப்பெற்றுள்ளது என்றும், இவ்வொப்பந்தபுள்ளியினை ஏற்க இயலாது என 07.04.2025 அன்று நேரடியாக தெளிவுரை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 04–02–2025 அன்று இணைய வழியாக பெறப்பட்ட திரு. பஞ்சாட்சரம் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி இவ்வலுவலக கடித குறிப்பு ந.க. எண் 003/2024/இ1, நாள் 15.04.2025 அன்று இரத்து செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து மேற்காண் பணிக்கு 29.09.2025 அன்று மறு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. அவ்வொப்பந்தபுள்ளியில் ஏற்கனவே கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் மீண்டும் கலந்து கொண்டு, குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு. நமச்சிவாயம் பஞ்சாட்சரம் என்பவரின் குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மேயர் அவர்களின் முன்னனுமதி பெற்று, 29.09.2025 அன்று பணி மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு திரு. நமச்சிவாயம் பஞ்சாட்சரம் என்ற ஒப்பந்ததாரரால் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பணிக்கு திரு. நமச்சிவாயம் பஞ்சாட்சரம் என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று 31.10.2025 ஆம் தேதிய மாமன்ற கூட்டத்தில் தீர்மான எண் 892 வழியாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்ற விவரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5–இல் OSR நிதியின் கீழ் பணி மேற்கொள்ள 04.02.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வார்டு எண் 69 சீரடி சாய் நகர் பூங்கா மராமரத்து பணிக்கு ஆன்லையின் டெண்டர் போடப்பட்டது தொடர்பாக திரு.பஞ்சாட்சரம் என்பவரால் அளிக்கப்பட்ட புகாருக்கு மேற்காண் விவரப்படி அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என்ற விவரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது."

4. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.06.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண்.69ல் அமைந்துள்ள சீரடிசாய் நகர் பகுதியில் 5வது தெருவில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிய பூங்காவினை அமைத்திடவும், அதனை சுற்றி நடைபாதை மரக்கன்றுகள், சிறுவர் விளையாட்டு பூங்கா அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 60.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி

04.02.2025 அன்று பெறப்பட்டு இணைய வழி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதற்கான விண்ணப்பம் இணையதளம் வாயிலாக சமர்ப்பித்தேன். தொழில்நுட்ப கோளாரினால் நிராகரிக்கப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு மீண்டும் தாம்பரம் மாநகராட்சியால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதற்கான ஆணை எனக்கு பணி வழங்கப்பட்டு அப்பணியினை நல்ல முறையில் முடித்து அதற்கான தொகை தாம்பரம் மாநகராட்சியால் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி உதவிப் பொறியாளர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண்.69ல் அமைந்துள்ள சீரடிசாய் நகர் பகுதியில் 5வது தெருவில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிய பூங்காவினை அமைத்திடவும், அதனை சுற்றி நடைபாதை மரக்கன்றுகள், சிறுவர் விளையாட்டு பூங்கா அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 60,00 இலட்சத்திற்கு 03.12.2024ல் மாமன்ற தீர்மான எண்.640ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 04.02.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.பஞ்சாட்சரம் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட இணைய வழி ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரரின் விலை விகிதம் சரியாக வரப்பெறாததால், No Rank என குறிப்பிட்டு கணினியில் வரப்பெற்றது.

மேற்காணும் பணிக்கு 29.09.2025 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அந்த ஒப்பந்தப்புள்ளியில் ஏற்கனவே கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் மீண்டும் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.நமச்சிவாயம் பஞ்சாட்சரம் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று 29.09.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு திரு.நமச்சிவாயம் பஞ்சாட்சரம் 31.10.2025 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு பணி நிறைவு பெற்று அதற்கான தொகையினையும் மனுதாரருக்கு வழங்கிட நடவடிக்கையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7 முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை, தாம்பரம் மாநகராட்சியின் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண்.69ல் அமைந்துள்ள சீரடிசாய் நகர் பகுதியில் 5வது தெருவில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிய பூங்காவினை அமைத்திடவும், அதனை சுற்றி நடைபாதை மரக்கன்றுகள், சிறுவர் விளையாட்டு பூங்கா அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 60.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இணைய வழியாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு இணையதளம் வாயிலாக மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம், தொழில்நுட்ப கோளாரினால் நிராகரிக்கப்பட்டது என்பதும், மேற்கண்ட பணிக்கு மீண்டும் தாம்பரம் மாநகராட்சியால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதற்கான பணி ஆணை தனக்கு வழங்கப்பட்டு அப்பணியினை நல்ல முறையில் முடித்து அதற்கான தொகை தாம்பரம் மாநகராட்சியால் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண்.69ல் அமைந்துள்ள சீரடிசாய் நகர் பகுதியில் 5வது தெருவில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிய பூங்காவினை அமைத்திடவும், அதனை சுற்றி நடைபாதை மரக்கன்றுகள், சிறுவர் விளையாட்டு பூங்கா அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 60.00 இலட்சத்திற்கு 03.12.2024ல் மாமன்ற தீர்மான எண்.640ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 04.02.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர்

திரு.பஞ்சாட்சரம் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட இணைய வழி ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரரின் விலை விகிதம் சரியாக வரப்பெறாததால், No Rank என குறிப்பிட்டு கணினியில் வரப்பெற்றது.

மனுதாரார் குறிப்பிட்ட மேற்காணும் பணிக்கு 29.09.2025 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏற்கனவே கலந்து கொண்ட ஒப்பந்ததாரரான மனுதாரர் மீண்டும் கலந்து கொண்டு அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டது என்பதும், இப்பணியினை மனுதாரரால் மேற்கொள்ளப்பட்டு, அப்பணி நிறைவு பெற்று அதற்கான தொகையினையும் மனுதாரருக்கு வழங்கிட நடவடிக்கையில் உள்ளது என்பதும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண்.69ல் அமைந்துள்ள சீரடிசாய் நகர் பகுதியில் 5வது தெருவில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிய பூங்காவினை அமைப்பது தொடர்பாக மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏற்கனவே கலந்து கொண்ட ஒப்பந்ததாரரான மனுதாரர் மீண்டும் கலந்து கொண்டு அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டு, அப்பணி மனுதாரரால் மேற்கொள்ளப்பட்டும் அப்பணியும் நிறைவு பெற்று அதற்கான தொகையினையும் மனுதாரருக்கு வழங்கிட நடவடிக்கையில் உள்ளது என தாம்பரம் மாநகராட்சி உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதை ஏற்று, இம்மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. N.பஞ்சாட்சரம்.
கதவு எண் 9/5, சாலமன் தெரு, இரும்புலியூர்,
தாம்பரம், சென்னை–600 059.

(2) ஆணையாளர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு, தாம்பரம் மேற்கு, சென்னை–600 045.

(3) உதவி ஆணையாளர், மண்டலம்–5
தாம்பரம் மாநகராட்சி, சென்னை–600 059.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர். 16/7/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032